## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் ஒரு அளவினை அடையும் போது கணக்குகளில் அவை தனித் தனியாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் பகவந்தலாவ பயிற்சி நிலையத்தில் வருமானம் மற்றும் செலவினம் என்பன ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு தேறிய விளைவான ரூபா 1,807,707 ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் அரசின் மூலதன மானியமாக நிறுவகத்திற்கு 2010 இற்கு முன்பு கிடைத்திருந்த ரூபா 119,992,689 தொகையான மானியம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவகமானது பெறுமானத் தேய்வுகளுக்குரிய கணக்கீட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இற்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) பிழையாகக் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 66,597 தொகையினால் குறைவாகக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் தேறிய பற்றாக்குறை மற்றும் நீண்ட காலப் பொறுப்புக்கள் என்பன அப் பெறுமானத்தினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கையேற்கப்பட்டிருந்த வாகனமொன்றிற்காக நிறுவனத்திற்குச் சொந்தமான பழைய வாகனமொன்றின் விற்பனையில் கிடைத்த ரூபா 1,231,776 தொகையான நிதியினை பொது திறைசேரிக்கு அனுப்பிவைத்தல்களைக் கணக்கு வைக்கும் போது ஒன்றிணைந்த மூலதனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டில் பெறப்பட்ட மூலதன மானியம் அப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 பெற வேண்டிய கணக்குகள்

2 – 3 வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 48,750 தொகையான பெற வேண்டிய மீதி நிறுவகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு | (அ) பணிப்பாளர் சபையின் எண்ணிக்கை 15 அங்கத்தவர்களினால் பிரதி நிதித்துவப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையின் எண்ணிக்கை 12 ஆக இருந்தது. |

| | | |
|---|---|---|
| | | (ஆ) விடயப் பொறுப்பு அமைச்சரினால் கட்டுப்பாட்டுச் சபையில் தொழிற் சங்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104 | ரூபா 154,875 தொகையான வாகன இழப்புக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | பீஈடி/27 ஆம் இலக்க 2005 சனவரி 27 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிரூபம் | வரைவு வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவுற்று 60 தினங்களுக்குள் இறுதிக் கணக்குகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 8,500,000 தொகையான திறைசேரி மானியம் கருத்திற்கொள்ளப்பட்டதை அடுத்து மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 4,361,708 தொகையான பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 10,505,200 தொகையான திறைசேரி மானியங்கள் கருத்திற் கொள்ளப்பட்டதை அடுத்து முன்னைய ஆண்டின் போது ரூபா 1,511,302 தொகையான மிகை ஏற்பட்டமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 5,873,010 தொகை வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது. 2010ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2011 ஆம் ஆண்டின் போது அரச மானியம் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமை என்பன மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் அதிக வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 2.2 விபரமான மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானங்களில், 62% ஆன செயற்பாட்டுச் செலவினத்தை ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது.

(ஆ) நிறுவகத்தின் மொத்த வருமானத்தில் 70% செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உழைக்கப்பட்ட வருமானங்களைக் கொண்டிருந்ததுடன் மீதியான 30% அரச மானியமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**மீளாய்வாண்டின் பாடநெறிகள் நடாத்தலின் முன்னேற்றம்**

2011 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த பாடநெறிகளுக்கிடையில் உண்மையாக நடைபெற்ற பாடநெறிகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

| 2011 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட பாடநெறிகளின் பெயர் | திட்டமிடப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | திட்டமிடப்பட்ட எண்ணிக்கையின் சதவீதமாக % |
|---|---|---|---|
| கல்வி மற்றும் தொழிற் துறை நிகழ்ச்சித்திட்டங்கள் | 18 | 14 | 77 |
| தேயிலை மற்றும் இறப்பர் தொழிநுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 13 | - | 0 |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 05 | - | 0 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 08 | 03 | 37.5 |
| சிறுதோட்ட உரிமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறி | | | |

| | | | |
|---|---|---|---|
| தேயிலை<br>இறப்பர்<br>தெங்கு<br>கரும்பு பயிர்ச்செய்கை | திட்டமிடப்பட்டிருக்கவில்லை | 74 | - |
| விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 28 | 10 | 36 |
| பயிர்ச் செய்கையாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 | 02 | 67 |
| வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 | - | 0 |
| வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 | - | 0 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தேயிலை, இறப்பர்களுக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பன மீளாய்வாண்டில் நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் எவ்வித நிகழ்ச்சித் திட்டங்களும் நடைபெற்றிருக்கவில்லை.

(ஆ) திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் என்பன திட்டமிடப்பட்ட எண்ணிக்கையில் 37.5% மாத்திரமே நடைபெற்றிருந்தது.

### 3.2 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்று நிரூபத்தின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக நிறுவகத்தின் ஒலியலைப் பிரிவின் பயன்பாட்டிற்காக ரூபா 1,224,380 தொகைக்கு செலவு செய்யப்பட்டிருந்த சோனி வகையைச் சேர்ந்த வீடியோ புகைப்படக் கருவி வரிசை அமைச்சின் உபயோகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவகத்திற்குரிய மூன்று ஊழியர்கள் வரிசை அமைச்சின் காரியாலயத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அம் மூன்று ஊழியர்களுக்காக நிறுவகத்தினால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக திசெம்பர் மாதம் ரூபா 28,578 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 பதவியணியினர்

செயற்பாடு நடவடிக்கைகளுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட 4 பதவி நிலைப் பதவிகளின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அமைய அடிப்படையில் பதவிநிலைத்தரமல்லாத மற்றும் கனிஷ்ட தரங்களுக்கு 10 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான அங்கீரிக்கப்பட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பதவி நிலை | 11 | 07 | 04 |
| பதவி நிலையல்லாத | 14 | 14 | - |
| கனிஷ்ட | 13 | 13 | - |
| | 38 | 34 | 04 |

## 4 கணக்கீட்டுச் செயற்பாடுகளும் உள்ளகக் கட்டுப்பாடும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பிடுகையில் 37.39% முதல் 100% வரையான வீச்சில் கவனத்தில் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**4.2 வருடாந்த அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல்**

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த அறிக்கை 2012 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காலத்துக்குக் காலம் நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனப் பயன்பாடு

(இ) பதவியணியினர்

(ஈ) பாடநெறிக் கட்டணம்